**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**

# P102 உரைநடையும் நாடகமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நச்சினார்க்கினிரியர் உரை வரைந்த நூல்கள் யாவை?
2. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை யார்?
3. இரா.பி.சேதுப்பிள்ளையின் நூல்களுள் சாகித்ய அகாதமி விருது பெற்றது எது?
4. கடல்கொண்ட தென்னாடு நூலின் ஆசிரியர் யார்?
5. குடந்தை நகர் கோ – யார்?
6. பாரதியாரின் பாடல்கள் குறித்து காமராசர் கூறியது என்ன?
7. இலக்கியத் திறனாய்வைப் பற்றி மு.வ. எழுதிய இரு நூல்களைக் குறிப்பிடுக.
8. கோவி.மணிசேகரனின் உரைநடைக்கு ஊற்றுக்கண்ணாகத் திகழ்ந்தவர் யார்?
9. அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் நாடக நூல்கள் யாவை?
10. விபுலானந்த அடிகள் எழுதிய நாடக ஆராய்ச்சி நூல் எது?
11. ந.முத்துசாமியின் நாடகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
12. குறவஞ்சி நாடகங்கள் இரண்டினைக் குறிப்பிடு.
13. நவாப் இராஜமாணிக்கம் நடத்திய நாடக மன்றங்களைக் கூறுக.
14. பெண்களை மட்டுமே கொண்டு நாடகக்குழுவை நடத்தியவர் யார்?
15. எம்.ஆர். இராதாவின் புகழ்பெற்ற நாடகம் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. உரையாசிரியர் சேனாவரையர் – குறிப்பு வரைக.
2. திரு.வி.கவின் உரைநடை குறித்து இயம்புக.
3. மனோன்மணீயம் நாடகத்தில் வெளிப்படும் மொழி உணர்வினைப் புலப்புடுத்துக.
4. பேரறிஞர் அண்ணாவின் உரைநடை ஆளுமைத்திறனை விளம்புக.
5. பாவேந்தர் பாரதிதாசனின் நாடகங்கள் குறித்து விவரிக்க.
6. கண்ணதாசனின் உரைநடைத் திறனைச் சான்று காட்டி விளக்குக.
7. மூவேந்தர் வரலாற்றைக் கூறும் நாடகங்களைப் பற்றி எழுதுக.
8. வானொலி நாடகங்கள் குறித்து விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாவாணரின் உரைநடை குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உரைநடையின் வகைகளைக் கூறி விளக்கியுரைக்க.

2. (அ) தமிழின் உரைநடை வளர்ச்சிக்குத் தனித்தமிழ் இயக்கங்களும் திராவிடஇயக்கங்களும் ஆற்றிய பணிகளை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) சங்கரதாசு சுவாமிகள் நாடகங்களுக்காக வகுத்த நெறிமுறைகளை விளக்கியுரைக்க.

3. (அ) தொலைக்காட்சி நாடகங்களும் தமிழ்ச்சமூகமும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தமிழகத்திலும் ஈழத்திலும் காணப்படும் தெருக்கூத்துக் கலை குறித்து ஒரு கட்டுரை வரைக.

* * *